**<u>அசல் வழக்கு எண். 22/2019</u>**

**23.01.2025**

**பெயர் – விஜயராஜ் (Pw1)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) எனக்கும், பிரதிவாதிக்கும் எந்த வகையில் பழக்கம் என்றால் கணியூர் மார்க்கெட்டில் வைத்து பழக்கம். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். பிரதிவாதி அந்த சமயத்தில் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் தெரியாது. எனக்கும், பிரதிவாதிக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் கடந்த 2 ஆண்டுகளாக சந்தைக்கு வந்த வகையில் பழக்கம். பிரதிவாதி யார் மூலமாக என்னிடம் பணம் கடன் கேட்டார் என்றால் பிரதிவாதியே என்னிடம் நேரடியாக பணம் கடன் கேட்டார். நான் இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கு போன்று எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இதே போன்று 5–6 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். உடுமலைப்பேட்டை நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் உடுமலையில் தாக்கல் செய்துள்ளேன். எத்தனை என்று தெரியவில்லை. அவை இந்த நீதிமன்றத்திற்கும் மாற்றப்பட்டுள்ளது.

(2) உடுமலைப்பேட்டையில் முடிந்த வழக்குகளையும் சேர்த்து எத்தனை வழக்குகள் தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. சுமார் 5–6 வழக்குகள் இருக்குமா என்றால் தெரியவில்லை. நிப கிரைய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தின் அளவுகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் பத்திர எழுத்தர் தான் எழுதினார். எனக்கு தெரியவில்லை. நிப கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பிறகு 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்த போது கல்யாணி என்பவர் மூலம் பைசல் பேசினேன் என்றால் இல்லை. தாவா இடத்தில் நான் வாங்கிய போது இருந்த வீட்டு இருந்த இடத்தில் தற்போது வீடு புதிததாக கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு நான் மேற்படி வீட்டிற்கு சென்று பணம் கேட்டேன் என்றால் பணம் கேட்கவில்லை வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது பார்த்து முடித்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். 1ம் பிரதிவாதி எப்போது இறந்தார் என்றால் தெரியவில்லை.

(3) 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் யார், யார் என்றால் அவரது மகன் பிரபு மற்றும் மகள்கள் மூன்று பேர் வாரிசுகள் உள்ளார்கள். நிப கிரைய உடன்படிக்கை எழுதிக்

கொடுத்தால் தான் நான் பிரதிவாதிக்கு பணம் கடன் கொடுப்பேன் என்று நிபந்தனையின் காரணமாக தான் மேற்படி உடன்படிக்கை எழுதப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்த காலத்தில் என்னிடம் வாங்கிய பணம் ரூ.60 ஆயிரத்தில் ரூ.25 ஆயிரம் திரும்பி கொடுத்தார் என்றால் 1ம் பிரதிவாதி கொடுக்கவில்லை அவரது மகன் பிரபு தான் கொஞ்சம், கொஞ்சமாக நான்கு தவணைகளில் செலுத்தினார். ஒவ்வொரு தவணையிலும் பிரபு சுமார் எவ்வளவு கட்டினார் என்றால் 2 ஆயிரம், 3 ஆயிரம், 4 ஆயிரம் என செலுத்தினார். பிரபு வட்டிக்கும், அசலுக்கும் சேர்த்து தான் கட்டினார் என்றால் வட்டி மாதா மாதம் செலுத்த முடியதாததால் அவர் கையில் இருப்பதை கொடுத்து வரவு வைக்கச் சொல்லி 6 மாதம் மற்றும் ஒரு வருடத்திற்கு ஒரு முறை கொடுத்தார்.

(4) அவ்வாறு என்னிடம் பணம் கொடுக்கும் போது ரசீது கொடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால் நோட்டில் எழுதி கொடுப்போம். 1ம் பிரதிவாதி இறக்கும் முன்பு வரை எவ்வளவு பணம் என்னிடம் செலுத்தினார்கள் என்றால் அவர் இறக்கும் வரை செலுத்தவில்லை. 1ம் பிரதிவாதி இறந்த பின்பு 16 ஆயிரம் செலுத்தியுள்ளார்கள். நிப கிரைய உடன்படிக்கையில் சாட்சி கையொப்பமிட்டவர்களில் 1ம் பிரதிவாதியின் மகன் பிரபுவும் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். நிப கிரைய உடன்படிக்கையில் மற்றொரு சாட்சி கையொப்பம் இட்டவர் யார் என்றால் நீண்ட நாட்கள் ஆனதால் ஞாபகம் இல்லை. தாவாச் சொத்திற்கான மதிப்பு ரூ.75 ஆயிரம் என்று கணக்கிட்டு தான் நிப கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். உண்மையில் மேற்படி தாவாச் சொத்தை அன்றைய மதிப்பின்படி ரூ.5 லட்சமாக இருந்தது என்றால் அன்றைய மதிப்பின்படி தாவாச் சொத்து ரூ.75 ஆயிரம் இருந்தது. நான் வட்டி, வரவு, செலவு செய்து வருகிறேன் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் நான் பணம் கொடுத்து வாங்கும் வட்டி வரவு செலவு தொழில் செய்வதால் அது சம்மந்தமாக இந்நீதிமன்றத்திலும் வழக்குகள் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(5) உடுமலை நீதிமன்றத்திலும் வட்டி, வரவு, செலவு செய்து இதே போன்று சொத்துக்களை அபகரிக்க வேண்டி வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் நான் நிப கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்தால் தான் நான் பணம் கடனாக கொடுப்பேன் என்று சொன்னதன் பேரில் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட நிப

கிரைய உடன்படிக்கை ஆவணம் என்றால் சரியல்ல. தற்போது தாவாச் சொத்தின் மதிப்பு ரூ.15 லட்சம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவாச் சொத்தில் புதிததாக வீடு கட்டப்பட்டுள்ளதா என்றால் கட்டப்பட்டுள்ளது. நான் தாவாச் சொத்தை 2 மாதங்களுக்கு முன்பு சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அப்போது நான் பிரதிவாதியிடம் பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டேன் என்றால் 1ம் பிரதிவாதி இல்லை அவர் மனைவி தான் இருந்தார். அவரிடம் வந்தால் பணம் கொடுக்குமாறு சொல்லி வந்தேன். நான் தாவாச் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் அளவுகள், விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது. பத்திர எழுத்தர் தான் பத்திரத்தை எழுதினார்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.01.23 08:43:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்